**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>**

**முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 09ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கள் கிழமை

**<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.90/2023</u>**

**<u>CNR No.TNTV14-000198-2023</u>**

முத்துலெட்சுமி ..... மனுதாரர்

எதிராக

1. R. ஆனந்தி
2. B. லதா
3. கிளை மேலாளர்,
   தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,
   திருத்துறைப்பூண்டி.
4. நிலா ........எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 16.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பி.எஸ்.மணிக்கண்ணன், எம்.காம்., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில்

திரு.கே.அருட்செல்வன், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகி பின்னிட்டு தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.வைரவநாதன், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்........

## உத்தரவு

கடந்த 10.05.2018–ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் மணலி மெயின் ரோடு, தேவராஜன் வீட்டின் எதிரே நடந்த சாலை விபத்தில் மனுதாரர் முத்துலெட்சுமி என்பவர் காயமடைந்ததால் ரூ.10,00,000/– பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்கக்கோரி மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166 –ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்** :–

i) இம்மனுவின் மனுதாரர் முத்துலெட்சுமி என்பவர் 70 வயது நிரம்பியவர் என்றும், விபத்து சமயத்தில் கறவை மாடு வளர்த்து பால் கறந்து பால் வியாபாரம் மற்றும் விவசாயக்கூலி வேலை செய்து மாதம் ரூ.12,000/– என வருமானம் ஈட்டி தனது குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றும்,

கடந்த 10.05.2018ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் மனுதாரர் வீட்டின் அருகில் இருந்த டிபன் கடையில் மனுதாரரின் பேரக் குழந்தைகளுக்கு காலை டிபனுக்காக இட்லி வாங்கிக் கொண்டு தேவராஜன் வீடு அருகே சாலையை கடக்கலாம் என்று சாலை ஓரமாக நின்று கொண்டிருந்தார் என்றும், அப்போது திருவாரூர் சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி TN 50 L 9891 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்கூட்டி ஸ்டிரீக் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் மேற்படி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை அனுசரிக்காமலும் தாறுமாறாக ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விட்டார்.

ii) மேற்படி விபத்தினால் சாலையில் தூக்கி எறியப்பட்ட மனுதாரருக்கு இடதுபக்க தலை, இடது முன்கை, இடது பக்க இடுப்பு, இடது முழங்காலுக்கு கீழ் பாதம் வரை அடிபட்டு கடுமையான வீக்கமும், மற்றும் உடலெங்கும் சிராய்ப்புக்காயங்களும் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி விபத்தில் காயமடைந்த மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டும், மனுதாரருக்கு கொடுங்காயமாக இருந்ததாலும், மேல் சிகிச்சை தேவைப்பட்டதாலும் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்டது என்றும், அன்றைய தினமே மனுதாரர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் என்றும்,

அங்கு மனுதாரர் 10.05.2018ம் தேதி முதல் 29.05.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், பிறகு விடுவிக்கப்பட்டு நாளது தேதி வரை வெளிநோயாளியாக பல்வேறு மருத்துவர்களிடமும் சிகிச்சை பெற்று வருகிறார்.

iii. இந்த விபத்து TN 50 L 9891 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்கூட்டி ஸ்டிரீக் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும், தாறுமாறாக ஓட்டிவந்ததாலும் ஏற்பட்டதாகும். மேற்படி வாகன ஓட்டுனர் மீது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.222/2018–ல் இ.த.ச. 279, 337 இ.த.ச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

iv. விபத்திற்கு முன்னர் மனுதாரர் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டு வந்தார் என்றும், தற்போது விபத்தில் ஏற்பட்ட காயங்களால் மனுதாரரால் நிற்கவோ, நடக்கவோ முடியவில்லை என்றும், இடது முன்கை, இடது பக்க இடுப்பு, இடது முழங்காலுக்கு கீழ் பாதம் வரை கொடுங்காயம் ஏற்பட்டதால் மனுதாரரால் விவசாயக்கூலி வேலை செய்யவோ, மாடு வளர்க்கவோ, மண்டியிட்டு அமர்ந்து பால் கறக்கவோ முடியவில்லை என்றும், காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த வேலைகளை செய்ய முடியாமல் நிரந்தர பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்.

v) மேற்படி விபத்தினால் மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் சொல்லமுடியாத மன வேதனையும், மனத் துன்பமும் அடைந்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், எனவே இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், வருமான இழப்பு, நிரந்தர ஊனம், மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு ஆகிய வகையிலும் இன்ன பிறவற்றிற்காகவும் ரூ.10,00,000/= (ரூபாய் பத்து லட்சம்) நஷ்ட ஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்கிறார்.

vi. மேற்படி விபத்தை ஏற்படுத்திய TN 50 L 9891 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்கூட்டி ஸ்டிரீக் வாகனத்தை 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து 30.04.2018ம் தேதியில் 1–ம் எதிர்மனுதாரர் வாங்கி உள்ளார் என்றும், விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரரே ஆவார் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் அனுமதியுடனேயே 1ம் எதிர்மனுதாரரின் மகள் தான் ஓட்டிச் சென்றுள்ளார் என்றும், விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் பெயரில் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டும், காப்பீடும் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எனவே மனுதாரர் கோரியுள்ள நஷ்ட ஈட்டுத்தொகையை எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தனியாகவோ கொடுக்க சட்டப்படி பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.

**3. <u>1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>**

I) மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு மாறானது என்றும், அதனை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி

செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ளது போல் இல்லாமல் மாறாக மனுதாரருக்கு சொற்ப காயமே ஏற்பட்டது என்றும், ஆனால் வழக்கின் தோதிற்காக பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ii) இந்த எதிர்மனுதாரர்கள் ஓட்டி வந்த TVS ஸ்கூட்டி ஸ்டிரிக் வாகனத்திற்கு முறையான இன்சூரன்ஸ் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் மனுதாரரின் விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரரே முழு பொறுப்பாவார் என்பதால் இந்த 1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதல்ல.

Iii) மேலும் 2வது எதிர்மனுதாரரிடம், 1ம் எதிர்மனுதாரர் இரண்டாம் நிலையில் இரு சக்கர வாகனத்தை வாங்கி பயன்படுத்தி வந்துள்ளார் என்றும், முந்தைய உரிமையாளரின் பெயரிலேயே வாகனத்தின் பதிவு பெயராக இருந்து வருகிறது என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை வாங்கும் போது பெயர் மாற்றுவதற்கு உரிய மனுவினை RTO அலுவலரிடம் விண்ணப்பித்துள்ளார் என்றும், விபத்து ஏற்படும் போது உரிமம் 2ம் எதிர்மனுதாரர் பெயரிலேயே இருந்து வந்துள்ளது.

iv) 4ம் எதிர்மனுதாரரின் பெயர் சௌமியா ஆகும். தவறாக நிலா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுவில் கூறியுள்ளது போல் மனுதாரருக்கு இடது பக்க தலை, இடது முன் கை, இடுப்பு,

முழங்காலுக்கு கீழ்பாதம் வரை அடிப்பட்டு கடுமையான வீக்கமும் உள்ளது போல் கொடுங்காயம் என பொய்யான சங்கதிகளை மனுதாரர் கூறியதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். ஆகவே மேற்படி 1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையை ஏற்று 1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களை இந்த வழக்கிலிருந்து விடுவித்து, மனுதாரர் கோரும் பரிகாரத்தை 3ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்துக் கொள்ள வேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. <u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

i) இழப்பீடு கோரும் இந்த மனு, இந்த 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராகவும், உண்மை நிலவரங்கள் அல்லது சட்டத்தின்படி ஏற்கத்தக்கதல்ல எனவும், இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராகக் காணப்படும் அனைத்து முக்கிய குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறார் என்றும், மேலும் மனுதாரர் அவற்றை நிரூபிக்க வேண்டும் என்றும், இந்த மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து நிகழ்ந்ததை மனுதாரர் வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளின் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், TN–50–L–9891 என்ற பதிவு எண் கொண்ட TVS ஸ்கூட்டி ஸ்ட்ரீக் வாகனம் விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும், அது அதன் ஓட்டுநரின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலால் ஏற்பட்டதும் என்பதையும் மறுக்கிறார். எனவே, இந்த மனு எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் இது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

ii. வாகனத்தின் காப்பீட்டாளராக 3ம் எதிர்மனுதாரரை வழக்கில் சேர்க்க, மனுதாரர் தகவல் மூலத்தின் காப்பீட்டு விவரங்களை வழங்கவில்லை என்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், அவ்வாறு காப்பீடு செய்யப்பட்டிருந்தால், விபத்து நடந்த நேரத்தில் காப்பீட்டுக் கொள்கை நடைமுறையில் இருந்தது என்பதையும் 3ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார்.

iii. காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகளின்படி, TVS ஸ்கூட்டி ஸ்ட்ரீக்கை செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கும் நபர் மட்டுமே ஓட்ட வேண்டும் என்றும், இந்த வழக்கில், விபத்து நடந்த நேரத்தில் வாகனத்தை ஓட்டுவதற்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாத நபர் TVS ஸ்கூட்டி ஸ்ட்ரீக் வாகனத்தை ஓட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது. எனவே, மனுதாரரால் கோரப்பட்ட இழப்பீட்டைச் செலுத்த இந்தக் காப்பீட்டு நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது என்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து கூடுதல் தகவல்கள், உரிமம் போன்றவை கிடைத்த பிறகு கூடுதல் எதிர் மனுவைத் தாக்கல் செய்வதற்கான உரிமைகளை 3ம் எதிர்மனுதாரர் கொண்டுள்ளார்.

iv. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்பதும், விபத்து நடந்த நேரத்தில் அவரது மகள் வாகனத்தை ஓட்டினார் என்பதும்

மறுக்கப்படுகிறது என்றும், இரண்டாவது எதிர்மனுதாரர் மௌனமாகவும் ஒத்துழைக்காமலும் இருந்தாலும் கூட, மோட்டார் வாகனங்கள் இந்த 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், அது எப்போதும் காப்பீட்டுக் கொள்கையின் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்பதால், பிரிவு 170–இன் படி காப்பீடு செய்யப்பட்டவருக்கு உரிமையுள்ள அனைத்து சட்டப்பூர்வமான தற்காப்பு வாதங்களையும் முன்வைக்க இந்த மாண்புமிகு நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்றும், மேலும், அதற்கான ஆதாரம் இல்லாத நிலையில், இந்த 3ம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீட்டிற்கும் பொறுப்பாக்க முடியாது.

v. இந்த 3ம் எதிர்மனுதாரர் குறிப்பாக மனுதாரரின் வயது, அவரது தொழில் மற்றும் அவரது மாத வருமானம் ரூ.12,000/– ஆகியவற்றை மறுக்கிறார் என்றும், மேலும், சிகிச்சை காலம், காயங்களின் பின்விளைவுகள், மருத்துவச் செலவுகள், வருமான இழப்பு, கூடுதல் ஊட்டச்சத்துக்கான கோரிக்கை, போக்குவரத்துச் செலவுகள், உதவியாளர் செலவுகள், வலி மற்றும் வேதனைக்கான கோரிக்கை, கூறப்படும் எதிர்கால இழப்புகள், விபத்தின் காரணமாக ஏற்பட்ட நிரந்தர ஊனம் போன்றவை உண்மையற்றவை என்றும், மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு எந்தவித வருமான இழப்பு இல்லை என தெரியவருகிறது.

vi. மனுதாரரால் கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகை மிக அதிகமாகவும், அளவுக்கு மீறியதாகவும் உள்ளது என்றும், மேலும், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படவில்லை என்றும், மனுதாரர், கூறப்படும் விபத்துத் தேதிக்கு முன்பு இருந்தது போலவே, இயல்பான உடல் நலத்துடன் தனது அன்றாட வாழ்க்கையையும் தொழிலையும் எந்தவிதத் தடங்கலோ சிரமமோ இன்றித் தொடர்ந்து வருகிறார் என்றும் மேலும் தெரியவருகிறது என்றும், எவ்வாறாயினும், உரிமைக்கோரலை வலுப்படுத்தவும் எதிர்பாராத ஆதாயத்தைப் பெறவும் கூறப்படும் ஊனம் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கூறப்படும் காயங்களின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை குறித்து மனுதாரர் நிரூபிக்க கடமைபட்டுள்ளார்.

**4.** 2ம் எதிர்மனுதாரர் தரப்புக்கு சம்மன் சார்வு செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் 07.03.2024ம் தேதியன்று தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார். 1 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு பின்னர் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாமல் 17.06.2025 அன்று தோன்றா தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

**<u>5. பிரச்சனை</u>:-**

1) இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2) மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?

3) மனுதாரர்கள் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**6.** இம்மனுவில் மனுதாரரான முத்துலெட்சுமி என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **நீ.ம.சா.ஆ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**7. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில்

" கடந்த 10.05.2018ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் என் வீட்டின் அருகில் இருந்த டிபன் கடையில் என்னுடைய பேரக் குழந்தைகளுக்கு காலை டிபனுக்காக இட்லி வாங்கிக் கொண்டு தேவராஜன் வீடு அருகே சாலையை கடக்கலாம் என்று சாலை ஓரமாக நின்று கொண்டிருந்தேன். அப்போது திருவாரூர் சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி TN 50 L 9891 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்கூட்டி ஸ்டிரீக் வாகனத்தை ஓட்டி வந்த

ஓட்டுநர் மேற்படி இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை அனுசரிக்காமலும் தாறுமாறாக ஓட்டி வந்து என் மீது மோதி விட்டார். " என சாட்சியமளித்துள்ளார்.

8. ஆனால், **முதல் தகவல் அறிக்கையில்,**

" 10.05.18ம் தேதி காலை 10 மணியளவில் நான் வீட்டுக்கு அருகே உள்ள டிபன் கடையில் பேர பிள்ளைகளுக்கு இட்டலி வாங்கி கொண்டு கிழக்கிலிருந்து மேற்காக தேவராஜன் வீட்டருகே என் வீட்டிற்கு செல்ல சாலையை கடக்க இருந்தபோது வடக்கிலிருந்து தெற்காக திருவாரூர் பக்கத்திலிருந்து TN 50 L 9891 TVS SCOOTY STREAK வண்டியை ஓட்டி வந்த ரவி மகன் நிலா வண்டியுடன் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து என் மீது மோதி தள்ளிவிட்டார். " என கண்டு எழுதப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி சாட்சியத்தையும், சான்றவாணங்களையும் மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியங்களோ அல்லது ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2ஆன விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3ஆன திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த மெடிக்கோ லீகல் ஒப்பினீயன், ம.சா.ஆ.4ஆன திருவாரூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி, ம.சா.ஆ.8ஆன மருத்துவ குறிப்புகள், ம.சா.ஆ.9ஆன மருத்துவ பில்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆகியவற்றின்

அடிப்படையில் பார்க்கும்போது மனுதாரருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டது என்பதும், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான (நிலா என்பவர்) 4ம் எதிர்மனுதாரரர் தான் காரணம் என்றும், அவரது கவனக்குறைவு தான் இவ்விபத்திற்கு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10. <u>பிரச்சினை எண்.2க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான (நிலா என்பவர்) 4ம் எதிர்மனுதாரரர் தான் காரணம் என்று மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பது குறித்து நாம் இங்கு பரிசீலிக்க வேண்டி உள்ளது. சம்பவத்திற்கு காரணமான TN 50 L 9891 TVS SCOOTY STREAK என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் ஆனது 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது **ம.சா.ஆ.6** ஆன வாகனத்தின் பதிவு சான்றிதழ் மூலம் தெரியவருகிறது. மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள என்பது **ம.சா.ஆ.7** ஆன காப்பீட்டு பாலிசி மற்றும் **ம.சா.ஆ.5**ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் **காலம் எண்.10**லிருந்து (The oriental Insurance Co Ltd., P.No.480690/31/2018/4471 Period 20.03.2019) தெளிவாகிறது. மேற்படி 2ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு (4ம் எதிர்மனுதாரர்) ஓட்டுநர் உரிமத்திற்கான விபரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பது

**ம.சா.ஆ.5** ஆவணமான மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் **காலம் எண்.7ல் P**articulars or driving license if available **Not produced** என்ற விபரத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் விபத்தானது 10.05.2018ம் தேதியன்று நடைபெற்றுள்ளதால் 2ம் எதிர்மனுதாரின் ஓட்டுநருக்கு (4ம் எதிர்மனுதாரருக்கு) விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது மனுவிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் தெளிவாக தெரியவருகிறது மேலும், 2ம் எதிர்மனுதாரரின் வாகனமானது 3ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு 21.03.2018 to 20.03.2019 வரை நிலுவையில் இருந்துள்ளது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவணங்களை பரிசீலித்த போது மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய கீழ் கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

" மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் சுவரன் சிங் 2004(1) TNMAC 104(SC)** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பின்படி பார்க்கும்போது தற்போதைய மோட்டார் வாகன சட்டத்தில் பிரிவு 150(4)ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் தற்போது செலுத்திவிட்டு பெறுக என்ற கோட்பாடு அமுலில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது". மேற்படி விளக்கங்கள் ஏற்கதக்க வகையிலும் மேற்படி கொள்கை தற்போதும் நடைமுறையில் உள்ளது என்பதை நியாயப்படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளது. இதனால் தற்போது **செலுத்திவிட்டு பெறுக** கோட்பாடு நடைமுறையில் உள்ளது என இத்தீர்ப்பாயம் கருதுகிறது. இதனை தொடர்ந்து இந்த வழக்கில் 4ம்

எதிர்மனுதாரரான வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதை கொண்டு மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டும் என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்யும் இழப்பீட்டு தொகையினை விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் 3ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி 3ம் எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையினை **காப்பீட்டு விதிமீறல்** (ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் விபத்து நடைபெற்றுள்ளதன் அடிப்படையில்) புரிந்த வாகனத்தின் உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து (பாலிசி மற்றும் வாகனத்தின் பதிவு சான்றிதழில் பெயர் இருக்கும் நபர்) இதே வழக்கு நடவடிக்கையில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும் என 2வது பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**10. <u>பிரச்சினை எண்.3க்கு தீர்வு :–</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களை மெய்பிக்க ம.சா.1ஆக விசாரித்து கொண்டதோடு, வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்திலிருந்து மனுதாரருக்கு இடதுபக்க தலை, இடது முன்கை, இடது பக்க இடுப்பு, இடது முழங்காலுக்கு கீழ் பாதம் வரை அடிபட்டு கடுமையான வீக்கமும், மற்றும் உடலெங்கும் சிராய்ப்புக்காயங்களும் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி விபத்தில் காயமடைந்த மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டும், மனுதாரருக்கு கொடுங்காயமாக இருந்ததாலும், மேல்

சிகிச்சை தேவைப்பட்டதாலும் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்டது என்றும், அன்றைய தினமே மனுதாரர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், அங்கு மனுதாரர் 10.05.2018ம் தேதி முதல் 29.05.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், பிறகு விடுவிக்கப்பட்டு நாளது தேதி வரை வெளிநோயாளியாக பல்வேறு மருத்துவர்களிடமும் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதும் தெரிய வருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 17% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி **நீ.ம.சா.ஆ.1** ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் In Kalaiselvi Vs. Manokaran and another, reported in 2024 (1) TN MAC 680 மற்றும் Future Generali India Insurance company Ltd. Vs. Manivannan and others, 2024(1) TN MAC 598 (DB)**–ல் வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி இவ்வழக்கில் விபத்தானது 2018–ல் நடந்துள்ளது என்பதால் 1 சதவீத ஊனத்திற்கு ரூ.7,000/– வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.7000/– வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 17% என்பதால் (17%x7000) அவர் 1,19,000/– இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை

இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.15,000/–ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் கறவை மாடு வளர்த்து பால் கறந்து பால் வியாபாரம் மற்றும் விவசாயக்கூலி வேலை செய்து மாதம் ரூ.12,000/– வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon'ble Madras High court has fixed the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ, வேறு இதர வேலை செய்பவராக இருந்தாலும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ.300 எளிதாக சம்பாதித்திருப்பார் என்றும், நாள் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.9,000/- சம்பாதித்து இருப்பார் என்று இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.9,000/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 9000x3மாதம்) ரூ.27,000/-மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.15,000/-ம்,

உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/−ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/−ம், வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/−ம், மருத்துவ பில்கள் ரூ.4,168/−மும் வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**11.** மனுதாரர் முத்துலெட்சுமி என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 17% நிரந்தர ஊனத்திற்கு (17%x7000) | ரூ.1,19,000/− |
| வலி வேதனைக்கு | ரூ.15,000/− |
| வருமான இழப்பீடுக்கு (9000x3) | ரூ.27,000/− |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.15,000/− |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/− |
| போக்குவரத்து செலவு | ரூ.5,000/− |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/− |
| மருந்துவ பில்கள் | ரூ.4,168/− |
| மொத்தம் | ரூ.2,00,168/− |

**12.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.2,00,168/− சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு

தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை **உயர்நீதிமன்றம்** The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others **என்ற வழக்கில்** 2016(1) TN MAC 433–**ல்** பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**13.** இறுதியாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடாக ரூ.2,00,168/–ஐ கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு மனு தேதி (25.04.2019) முதல் முழுத்தொகை செலுத்தும் வரை ஆண்டுக்கு 7.5% பின்வட்டி சேர்த்து இன்றிலிருந்து 2மாதத்திற்குள் 3ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு அவ்வாறு 3ம் எதிர்மனுதாரர் (காப்பீட்டு நிறுவனம்) செலுத்தும் இழப்பீட்டுத் தொகையினை காப்பீட்டு விதிமீறல் புரிந்த காரணத்திற்காக விபத்து ஏற்படுத்திய வாகனத்தின்

<u>உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து (காப்பீடு மற்றும் வாகனத்தின் பதிவு சான்றிதழ் பெயர் உள்ள நபர் என்ற அடிப்படையில்) இதே வழக்கு நடவடிக்கையில் வசூல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.</u> மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2018–ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.1001.68/– (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.1,002/–) உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.7003.36/– (முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.7,003/–) என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, சரிப்பார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.30 20:32:01 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**செலவுத் தொகை பட்டியல்**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 1374 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 40 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 7003 | 00 |
| சம்மன்படி | 18 | 00 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 8545 | 50 |

(இம்மனுவின் செலவுத் தொகையான **ரூ.8,546/-ஐ** 3ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

**மனுதாரர் தரப்பு சாட்சி**:-

| | | |
|---|---|---|
| ம.சா.1 | முத்துலெட்சுமி | மனுதாரர் |

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**</u>:–

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.05.2018 | முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 10.05.2018 | விபத்து பதிவேடு – உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 10.05.2018 | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த மெடிக்கோ லீகல் ஒப்பீனியன் – உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 10.05.2018 | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி – அசல் |
| ம.சா.ஆ.5 | 25.05.2018 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை – உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | –– | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன பதிவு சான்றிதழ் – உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | 21.03.2018 முதல் 20.03.2019 வரை | 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டு பாலிசி – உண்மை நகல் |
| ம.சா.ஆ.8 | –– | மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ குறிப்புகள் – அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.9 | -- | மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் ரூ.4,168/- (எண்ணிக்கை - 11) - அசல் |
| ம.சா.ஆ.10 | -- | மனுதாரருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் குறுந்தகடு -1 அசல் |
| ம.சா.ஆ.11 | --- | மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. ) - நகல் |

3. **<u>நீதிமன்ற சான்றாவணம்</u>**:-

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 01.09.2025 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

4. 3**<u>ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.30 20:32:12 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.